எண்: 67/2023 நாள்: 13.09.2023

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003**

**செய்தி வெளியீடு**

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (தொகுதி-IV)-இல் அடங்கிய தட்டச்சர் பதவிக்கான மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு கடந்த 21.08.2023 முதல் 11.09.2023 வரை தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற்றது. மேற்கூறிய கலந்தாய்வில் 3339 தட்டச்சர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகளுக்கான 30 காலிப்பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த நபர்கள் இல்லாத காரணத்தால், அவை முன்கொணர்வு காலிப்பணியிடங்களாக (Carried Forward) வைக்கப்பட்டுள்ளன. 1 காலிப்பணியிடம் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் ஆணைப்படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1 காலிப்பணியிடம் மட்டும் இரண்டாம்கட்ட கலந்தாய்வின் மூலம் தகுதி வாய்ந்த தேர்வரைக் கொண்டு நிரப்பப்படும்.

ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV (தொகுதி-IV)-இல் அடங்கிய 1077 சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவிக்கான மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு 21.09.2023 முதல் 26.09.2023 வரை நடைபெறும். தேர்வாணைய அலுவலகத்தில் போதிய இடவசதி இன்மையால் மேற்கண்ட நாட்களில் சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு வருகை புரியும் விண்ணப்பதாரர்கள் தங்களுடன் இளம் சிறார்கள், பெண்கள் மற்றும் முதியோர் ஆகியோர்களை உடன் அழைத்து வருவதினை தவிர்த்து தேர்வாணைய அலுவலகத்தின் எதிரே ஏற்படும் கூட்ட நெரிசலை தவிர்க்க தேர்வாணையத்திற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பி.உமா மகேஸ்வரி, இ.ஆ.ப.,
செயலாளர்